**சாவகச்சேரி நகரசபை**
**யாழ்ப்பாண மாவட்டம்**

---

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 24 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 17 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 28 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சாவகச்சேரி நகரசபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான நீதிமன்றத்தண்டப்பணம் கணக்குகளில் காட்டப்படாமையால் வருமானம் கணக்குகளில் குறைவாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

(ஆ) மின்சார செயற்பாடுகள் அனைத்தும் 2009 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை மின்சார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தபோதும் இறுதிக் கணக்குகளில் காட்டப்பட்ட மின்சார களஞ்சிய இருப்பு மீதி ரூபா 241,156 இற்கு பதிவழிப்பு நடவடிக்கை எடுக்கப்படாமையால் விபரங்கள் குறிப்பிடப்படாத மீதியாக கணக்குகளில் காட்டப்பட்டு வருகின்றது.

#### 1.3.2 பெறவேண்டியவை

சபையினால் 6 வருடங்களுக்கு மேலாக அறவிடப்பட வேண்டிய பதவியினர் கடன் நிலுவை ரூபா 107,984 அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 ஆவண சான்றுகள் இன்மை

ரூபா 1,093,190 பெறுமதியான சான்றுகள் இல்லாமையின் காரணமாக 01 கொடுக்கல் வாங்கலைக் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| நகரசபைகள் கட்டளைச்சட்டம் பிரிவு 44(2) | சபைகளின் வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பட்டியல்கள் அரச வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2015 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானமாக ரூபா 32,567,828 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும்போது இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானமாக ரூபா 26,332,911 ஆக இருந்ததுடன் வருமானம் அதிகரிப்பு ஏற்பட்டமையினால் நிதிவிளைவு ரூபா 6,234,917 அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.2 தொழிற்படு மூலதனம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 81,331,735 ஆக விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 49,294,915 ஆக விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 32,036,820 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.3 வருமான முகாமைத்துவம்

#### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015 மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| இறைகளும் வரிகளும் | 6,683 | 6,996 | 9,562 |
| குத்தகை வாடகைகள் | 19,535 | 29,843 | 306 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 791 | 637 | - |
| ஏனைய வருமானங்கள் | 56,712 | 58,819 | 50,627 |
| மொத்தம் | **83,721** | **96,295** | **60,495** |

**2.3.2 வீதவரிகள்**

மீளாய்வாண்டில் வீதவரி நிலுவையாக ரூபா 9,561,530 அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 வாடகைகள்**

மீளாய்வாண்டில் வாடகைகள் ரூபா 306,275 சபையினால் அறவிடப்படாமல் உள்ளது.

**2.3.4 உரிமக் கட்டணங்கள்**

மீளாய்வாண்டில் உரிமக் கட்டணங்கள் ரூபா 90,900 சபையினால் அறவிடப்படாமல் உள்ளது.

**2.3.5 முத்திரைக் கட்டணங்கள்**

காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 47,948,181 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் மீளாய்வாண்டில் பெறப்பட்டிருக்கவில்லை.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

**பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

(அ) ரூபா 3,000,000 பெறுமதியான சாவகச்சேரி மீன் சந்தைக் கட்டடம் ஒரு வருட காலமாக பயன்படுத்தப்படாமல் உள்ளது.

(ஆ) நகர அபிவிருத்தி அதிகார சபையின் வைப்புக்கள் ரூபா 1,079,378 உரிய நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படாது.

## 3.2 திண்மக்கழிவு முகாமைத்துவம்

-----------------------------------------------

சபையின் எல்லைக்குள் திண்மக்கழிவுச் செயற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

-------------------------------------------------------

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கபடாமையினால் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 119 தொடக்கம் ரூபா 2,336,406 வரையான வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

-------------------------------------

உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்

-------------------------------------------------------------------

சபையில் மீளாய்வாண்டில் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடைபெற்றிருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------------

பின்வரும் பகுதிகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது

(அ) வாகன அசைவுப் பதிவேடு

**(ஆ)** மேலதிக நேர உறுதிச்சீட்டு